Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 362

திங்கட்கிழமை
24 நவம்பர் 2025

கார்த்திகை 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# மாகாணசபைக்குப் பதிலாக விரைவில் புதிய முறைமை!

## இந்தியா செல்லும் ரில்வின் சில்வா கலந்துரையாடுவார் எனத் தகவல்

**கொழும்பு, நவ.25**
**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாண சபை முறைமையைப் பதிலீடு செய்யும் பிறிதொரு முறைமை தொடர்பாக ஆலோசித்து வருகின்றது என்றும், இந்தியாவுக்குச் செல்லவுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இது தொடர்பில் அங்கு கலந்துரையாடுவார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

11



## விவசாயபீட பேராசிரியர் துஷ்யந்தி காலமானார்

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் விவசாயபீட பீடாதிபதியும், தற்போதைய விவசாயப்பீடப் பேராசிரியருமான திருமதி துஷ்யந்தி

11



## வெளியானதா வினாத்தாள்? சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, நவ.24
தற்போது நடைபெற்றுவரும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பொருளியல் வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே கசிந்தது என்று வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பரீட்சைகள் திணைக்களம் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளது. பிரதிப் பரீட்சைகள் ஆணையாளரால் கடந்தவாரம் இந்தமுறைப்பாடு பதிவு செய்யப்பட்

11

## விசமத்தனமான கருத்துகளை நிறுத்தவேண்டும் கஜேந்திரகுமார்

### தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் காட்டம்



யாழ்ப்பாணம், நவ.24
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனான சந்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சமஷ்டியையே வலியுறுத்தியது. ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்கின்றோம் என்று எந்த இடத்திலும் நாம் கூறவில்லை. அவ்வாறிருக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விசமனத்தமான கருத்துக்களைக் கூறுவதைத் தவிர்க்கவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று

11

## உள்ளக விளையாட்டரங்குக்கு பழைய பூங்காவில் அடிக்கல்

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டரங்கு அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த உள்ளக விளையாட்டரங்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்படவுள்ளது.

11

## குற்றக்குழு உறுப்பினர்களை தடுத்துவைக்கப் புதிய சட்டம்

### நடவடிக்கை எடுக்கிறது அரசாங்கம்

கொழும்பு, நவ.24
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு உறுப்பினர்கள் தொடர்பான குற்றப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவும், அவர்களை நீண்டகாலம் தடுத்து வைப்பதற்கும் புதிய சட்டவரைவு ஒன்றைச் சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது என்று தகவல்கள் வெளியாகி

11

## 17 வயது மாணவர்கள் இருவர் போதைமாத்திரையுடன் கைது

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தில் கொழும்பைச் சேர்ந்த 17 வயது மாணவன் ஒருவரும், யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் 17 வயது மாணவன் ஒருவரும் போதைமாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.
விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள், யாழ்ப்பாணம் சிறுவர் பெண்கள் பொலிஸ் பிரிவில் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை அச்சுவேலியில் உள்ள சீர்திருத்தப் பள்ளியில் 14 நாள்கள்

11

## சிசு மரணம்

யாழ்ப்பாணம், நவ.24
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிசுவொன்று உயிரிழந்த நிலையில், உயிரிழப்புக்கான காரணத்தைக் கண்டறிய சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

11







### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின்

## நீச்சல் தடாக சீரமைப்பில் குழப்பம் திரைநீக்காது சென்றார் அமைச்சர்!

யாழ்ப்பாணம், நவ.24
பராமரிப்பின்றிக் கைவிடப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகச் சீரமைப்பை எவ்வாறு முன்னெடுப்பது என்ற குழப்பம் காரணமாக ஆரம்ப நிகழ்வில் வைக்கப்பட்ட நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்ய மறுத்து விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியேறியுள்ளார்.
மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் 2012ஆம் ஆண்டு ஆழம்கூடிய டைவிங் நீச்சல் தடாகம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டது. ஆயினும் சில வருடங்களில் அந்த நீச்சல் தடாகம் பராமரிப்பு இன்றிக் கைவி

11

## மழை தொடரும்

கொழும்பு, நவ.24
நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை அடுத்துவரும் சில நாள்களுக்குத் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாணத்திலும், மேல், சப்ரகமுவ, வடமேல், தென் மாகணங்களிலும் சில இடங்

11

## சீரற்ற காலநிலை 9 பேர் உயிரிழப்பு

02

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 23.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4264 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 01 17 43 45 |
| விசேட எழுத்து | D |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 23.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1331 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 11 38 50 51 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 23.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0290 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 6 9 9 6 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 23.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2370 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 39 43 47 52 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 23.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6022 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 8 6 4 9 0 7 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 23.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2052 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 03 37 50 73 |
| விசேட எழுத்து | H |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 23.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0138 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 46 50 |

# தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பலம்காட்டவுள்ள எதிர்க்கட்சிகள்

கொழும்பு,நவ.24

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தைத் தனித்தும், கூட்டாகவும் முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன உள்ளிட்ட எதிரணியிலுள்ள சில கட்சிகள் இணைந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தலைமையில் நுகேகொடயில் கடந்த 21 ஆம் திகதி கூட்டமொன்றை நடத்தின.

இதில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்கவில்லை. எனினும், எதிர்வரும் ஜனவரி மாதமளவில் அரசாங்கத்துக்கு எதிராகப் பெரிய போராட்டமொன்றை நடத்துவதற்கு அந்தக் கட்சி திட்டமிட்டுள்ளது என அறியமுடிகின்றது. அதேவேளை, நாடு முழுவதும் ஆயிரம் கூட்டங்களை நடத்துவதற்கு உத்தேசித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி அதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக டிசெம்பரில் இரு கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துவருகின்றது.

இதற்கு முன்னதாக எதிர்வரும் 8 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் விசேட நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது.

அதேபோல எதிரணியிலுள்ள ஏனைய சில கட்சிகளும் சில கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளன. முக்கியமான தருணங்களில் இணைந்து கூட்டங்களை நடத்துவதற்கும் சில கட்சிகள் பச்சைக்கொடி காட்டியுள்ளன.

இதற்கிடையில் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் கூட்டமொன்றை நடத்தவேண்டும் என்ற யோசனை ஆளுங்கட்சியிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | O | 4 3 7 3 0 9 | 0730 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | 2996 | M | 41 56 69 78 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | G | 07 20 39 53 | 5157 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0826 | 20 32 44 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | | 07 31 41 49 | 4708 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | B | 01 | 02 08 20 56 | 2172 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | X | 18 33 51 56 | 2822 |

## மருத்துவர்கள் வெளியேற்றம்; தடுக்கவேண்டியது கட்டாயம்!

### சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு.நவ.24

மருத்துவர்கள் உள்ளிட்ட உயர் திறனுடையவர்கள் நாட்டைவிட்டுச் செல்லும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்களைத் தடுத்து நாட்டில் தக்கவைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கத் தவறினால், யார் அரசாங்கம் செய்தாலும் நாட்டை முன்கொண்டுசெல்ல முடியாமற்போகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

அத்தியாவசிய உயிர்ப் பாதுகாப்பு 160 மருந்துப் பொருள்களும் களஞ்சியப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அதேபோன்று தேசிய மருத்துவமனை அறிவித்தல் பலகையில், அங்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படாத மருத்துவச் சோதனைகள் என ஒரு அறிவித்தல் போடப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மருத்துவத்துறைக்கு போதுமானளவு நிதி ஒதுக்காமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இதனால் எமது சுகாதாரத்துறை வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. மேலும் விசேட மருத்துவர்கள் உள்ளிட்ட வேறு துறைகளைச்சேர்ந்த நிபுணர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றனர்.

இவ்வாறு நாட்டைவிட்டுச் செல்லும் விசேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஏனைய துறைசார நிபுணர்களைத் தக்கவைத்துக்கொள்ள சுகாதார அமைச்சின் கொள்கை என்ன? எங்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் தேவையில்லை. நாட்டில் இருக்கும் உயர் தொழில் வல்லுநர்களுக்கு கொடுக்க நடவடிக்கை எடுங்கள் -என்றார். (ச-இ)

## புதிய 'லைசென்ஸ்' பெப்ரவரிக்குள் அச்சிடல்

கொழும்பு.நவ.24

அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களும் அடுத்த பெப்ரவரி மாதத்துக்குள் அச்சிடப்படும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் பிறகு, வழக்கம் போல் தினமும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் என அதன் ஆணையாளர் ஜெனரல் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அச்சிடப்படவேண்டிய சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்து ஐம்பதாயிரத்தை நெருங்குகிறது. சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடும் பணிகள் மூன்று இடங்களில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## சீரற்ற காலநிலை 9 பேர் உயிரிழப்பு

கொழும்பு,நவ.24

சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

10 மாவட்டங்களுக்கு மேலும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை, மாத்தறை, இரத்தினபுரி, பதுளை, அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்திலும் பலத்த மழை பெய்ததால், தெனியாய நகரத்தின் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

மாத்தறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 100 குடும்பங்களைச் சேர்ந்த 363 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## நுகேகொட கூட்டத்துக்கு இடையூறு செய்யவில்லை

### ஆளுந்தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,நவ.24

நுகேகொட கூட்டத்துக்கு அரசாங்கம் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார்.

நுகேகொட கூட்டத்தை குழப்புவதற்கு ஆளுங்கட்சி சதி செய்ததாகக் கூட்டு எதிரணி குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே ஆளுங்கட்சி எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

கனவு இளவரசரின் கனவானது ஐஸ்லாந்தில் மீண்டும் கலைந்துள்ளது என்பதையே நுகேகொட கூட்டம் வெளிப்படுத்தியது.

ரணில், மஹிந்த போன்றவர்களை மக்கள் விரட்டியடித்தனர். எனவே, அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்தவர்களுக்கு மீள உயிர்கொடுக்கமுடியாது எனவும் தேவானந்த சுரவீர குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'நாம் இலங்கையர்' உணர்வை எந்த அரசும் விதைக்கவில்லை

## அரியநேத்திரன் தெரிவிப்பு




**யாழ்ப்பாணம்,நவ.24**

**வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு 'நாம் இலங்கையர்' என்ற எண்ணக்கருவை ஆட்சிசெய்த கடந்த கால அரசுகளோ தற்போதைய அநுர அரசோ ஏற்படுத்தவில்லை என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி அநுரகுமார தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் அழைத்து எதிர்வரும் டிசெம்பர்,12,13,14 ஆகிய தினங்களில் தலைநகர் கொழும்பில் 'நாம் இலங்கையர்' என்ற விழாவை நடத்துவது தொடர்பாக ஆதரவு தருமாறு கூறி கலந்துரையாடினார். வடக்கு-கிழக்குத் தமிழினம் சுதந்திரமாக சுயநிர்ணய உரிமை கிடைக்கும்வரை இலங்கையில் வாழ்ந்தாலும் 'நாம் இலங்கையர்'என்ற உணர்வு இல்லாதவர்களாகவே உள்ளனர்.

இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களுக்கு ஒரு கரிநாள் அல்லது துக்க நாளாகக் கருதப்படுகிறது. இந்தத்தினத்தை சிங்கள தேசத்தின் சுதந்திர தினமாகக் கொண்டாடாமல், தமிழினப் படுகொலைக்கு நீதிகோரி பல போராட்டங்களை நடத்துகின்றனர். இப்போதும் திருகோணமலையில் புத்தர் சிலை, தாந்தாமலை, கிரான், வெல்லாவெளி, செங்கலடி, கதிரவெளியில் தொல்பொருள் ஆய்வுக்கான அறிவித்தல் பலகைகளைத் தொங்கவிட்டுக்கொண்டு மறுபுறம் நாம் இலங்கையர் என்ற நாடகத்தையும் அரங்கேற்றுகின்றனர். ஜனாதிபதி சொல்வதொன்று செய்வது வேறொன்றாகவே உள்ளது- என்றார். (ச-இ)



## வங்கி அட்டைகளூடாக பேருந்துக் கட்டணம்!

### இன்றுமுதல் ஆரம்பம்

கொழும்பு,நவ.24

பயணிகள் வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி இன்று திங்கட்கிழமை முதல் பேருந்துக் கட்டணங்களை செலுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டம், மகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகவுள்ளது. (ச-இ)

## நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு.நவ.24

தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக பல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் 2 வான்கதவுகள் தலா 6 அடி மற்றும் 4 வான்கதவுகள் தலா 4 அடி என திறக்கப்பட்டுள்ளன.

மேலும், தப்போவ நீர்த்தேக்கத்தில் 4 வான்கதவுகள் தலா 3 அங்குலம் திறக்கப்பட்டுள்ளன. அதேவேளை 4 வான்கதவுகள் தலா 2 அங்குலம் திறக்கப்பட்டுள்ளன.

மீ ஓயாவில் வினாடிக்கு 3,720 கன அடி நீர் வெளியேற்றப்படும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (ச-இ)



## ஏழாலையில் கசிப்பு விற்பனை; பெண் சிக்கினார்

யாழ்ப்பாணம்,நவ.24

10 லீற்றர் கசிப்புடன் 42 வயதுடைய பெண்ணொருவர் ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27)

## போதைக்குப் பணத்தை பெற குழந்தையின் நகை திருட்டு!

### உறவினர் கைது

யாழ்ப்பாணம்,நவ.24

போதைக்கு அடிமையான ஒருவர் தனது அண்ணனின் குழந்தையின் கையிலிருந்த தங்க ஆபரணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 32 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் போதைப்பழக்கத்துக்கு அடிமையானவர் எனத் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

## இப்பிடியும் உருட்டலாம்

வட்டுக்கோட்டைக்கு வழிகேட்டால் துட்டுக்கு ரண்டு கொட்டைப்பாக்கு எண்டமாதிரி, சம்பந்தமில்லாமல் கதைக்கிறது திசைகாட்டிக்காரருக்கு வழக்கமாப் போட்டுது. இப்ப யாழ்ப்பாணம் பழைய பூங்காவில கட்டுப்படப் போற உள்ளக விளையாட்டரங்குக்கு முட்டுக்குடுக்கத் துடங்கியிருக்கினம். அந்தப் பழைய பூங்காவில நிக்கிற மரங்களுக்கு நூறு வயதுக்கும் மேல. அதோட ரவுனுக்குள்ள ஓடித்திரியிற வாகனங்களால வாற கரிய மிலவாயுவை உறிஞ்சிற புண்ணியமும் உந்த மரங்களுக்கு இருக்கு. ஏற்கனவே யாழ்ப்பாணத்துக் காத்து மாசுபட்டிருக்கு எண்டு அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கு. அப்பிடிப்பட்ட நிலைமையில உந்த மரங்களை வெட்டி விழுத்திப்போட்டு, அதுக்கு மேல உள்ளக விளையாட்டரங்கைக் கட்டுறதால கனக்கச் சூழல் பிரச்சினையள் வரப்போகுது எண்டுசுற்றுச்சூழலில் அக்கறையுள்ளவை குரல்குடுத்தவை. ஆனால் அதுக்கு மறுத்தான் குடுக்கிறன் எண்ட போர்வையில திசைகாட்டிக்காரர் சொன்ன பதில்கள் , கேட்ட கேள்விக்குக் கொஞ்சமும் சம்பந்தமேயில்லாமல் இருக்கு. தங்கட பக்க நியாயத்தைச் சொன்னதைவிட, தங்களிட்ட நியாயம் கேட்டவையைக் குறை சொல்லுறமாதிரியும், மரநடுகையைக் கேவலப்படுத்திறமாதிரியும் பதில் சொல்லியிருக்கினம்.


தாங்கள் உந்த உள்ளக விளையாட்டரங்கு கட்ட மூண்டு பரப்புக் காணி தேடித் திரிஞ்சதாவும், ஆனால் ஒரு பரப்பு 3 கோடி சொன்னதால அரச காணி எண்டதால இந்த இடத்தில கட்ட வெளிக்கிட்டதா சொல்லி இருக்கினம். அதோட ரவுணை விட்டிட்டு வெளியில எங்கையும் கட்டினால் போக்குவரத்துப் பிரச்சினை இருக்காம். அதால் ரவுனுக்கதான் கட்டவேணுமாம். இப்பிடியெல்லாம் உருட்டினவை, ரவுணின்ர காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்த பழைய பூங்காவில வெட்டுப்படப் போற மரங்களுக்கு பதிலா என்ன செய்யப்போயினம் எண்டு சொல்லேலை. ரவுனுக்க உள்ளக விளையாட்டரங்கைக் கட்டினாத்தான் எல்லாரும் வந்துபோகச் சுகம் எண்டு சொன்னால், ஏன் உதே திசைகாட்டிக்காரர் சர்வதேச கிரிக்கெட் கிரவுண்டை ரவுனுக்க கட்டாமல் மண்டைதீவில கொண்டுபோய்க் கட்டுகினம்? அங்க போக்குவரத்து வசதி குவிஞ்சுபோய்க் கிடக்குதோ? கிரிக்கெட் கிரவுண்டுக்கு ஒரு நியாயம் இதுக்கு இன்னொரு நியாயமோ? எப்பவுமே வசதியீனங்கள் குறைஞ்ச இடங்களில இப்பிடியான விளையாட்டரங்குகளைக் கட்டினால். அதைச்சாட்டி அங்க என்னென்ன வசதியள் இல்லையோ அதுகளெல்லாத்தையும் ஒவ்வொண்டாச் செய்து வளப்படுத்திறவை. அப்பிடித்தான் ஒருகாலத்தில காடு மண்டிக் கிடந்த இடங்களெல்லாம் இப்ப ரவுணா மாறியிருக்கு.

தாங்கள் பிடிச்ச முயலுக்கு மூண்டுகால் எண்டு நிறுவுறதுக்காக இப்பிடி முட்டுக்குடுக்கிறவை நினைச்சிருந்தால் யாழ்ப்பாணம் கோட்டைக்குள்ள உந்த உள்ளக விளையாட்டரங்கைக் கட்டியிருக்கலாமே. காலியில கோட்டைக்குள்ளதானே கிரிக்கெட் கிரவுண்டிருக்குது. கோட்டைக்குள்ள அடைபட்டுக் கிடக்கிற இடத்தை இப்பிடிப் பிரியோசனப்படுத்தி இருக்கலாம். ஆனால் அங்க தொல்லியல், அது இதெண்டு கதைவிடுவினமே தவிர விளையாட்டரங் கைக் கட்டமாட்டினம். காலிக் கோட்டை யும் தொல்லியல் சின்னம் தான். ஆனால் அதுக்கதான் கச்சேரி, போஸ்ட் ஒப்பீஸ் , திணைக்களங்கள் எண்டு எல்லாமே ஒரு இடத் தில இருக்கு. அப்பிடித் தொல்லியல் சின்னத்துக்கு சேதம் வராமல் யாழ்ப்பாணம் கோட்டைக்குள்ளும் செய்யலாமே. பழையபூங்காவில நிக்கிற மரங்களை வெட்டி விழுத்தித் தான் உதைச் செய்யவேணுமெண்டில்லையே.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்.




மல்லாகம் உப தபாலகத்தில் உப தபால் அதிபராக தன் பணியில் சிறப்புற 18 வருடங்கள் கடமையாற்றி இன்று (24.11.2025) திங்கட்கிழமை ஓய்வு பெறும்

### நடராசா பொன்னம்பலம்

அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வு காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
**அஞ்சல் சமூகம், சுன்னாகம்.**




**காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**அல்வின் வீதி, காரைநகர், பதிவு இல. J/22 - 15.09.1999**


**ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற பொதுமுகாமையாளர் ஒருவரை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரல்**

1. பனை தென்னை வள சங்கத்தின் பொதுமுகாமையாளராக இருந்திருக்க வேண்டும்.
2. சம்பளம், ஏனைய விடயங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
3. பொதுமுகாமையாளராக கடமையாற்றிய சங்கத்தின் தலைவர் உறுதிப்படுத்தல் கடிதம் அத்துடன் கடமையாற்றிய காலத்தில் எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படாதமையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த காலம் ஒரு வருடமாகும்.
5. விண்ணப்ப முடிவுத் திகதி 08.12.2025

**தலைவர்**
**காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**அல்வின் வீதி,**
**காரைநகர்.**
**24.11.2025**

(CS 46552) E

## கட்டைக்காட்டில் காற்றால் வீடு சேதம்



யாழ்ப்பாணம், நவ.24

யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு வீசிய கடும் காற்றால் வீடு ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் கடும் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் கட்டைக்காட்டு பகுதியில் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்த நிலையில் கடும் காற்று காரணமாக வீடு ஒன்று சேதமடைந்துள்ளது.

இராணுவத்தால் சில வருடங்களுக்கு முன்பு பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பத்துக்கு வழங்கப் பட்ட வீடே இவ்வாறு சேதமடைந்துள் ளது. (ச-27)

## சத்திய சாயிபாபாவின் நூறாவது பிறந்ததினம்!



கொழும்பு,நவ.24

சத்திய சாயிபாபாவின் நூறாவது பிறந்ததினம் யாழிலுள்ள நவமங்கை நிவாசத்தில் அதன் தலைவி சுவர்ண நவரட்ணம் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பாபாவின் நூறாவது பிறந்த தினத்தை நினைவு கூரும் முகமாக நூறு தீபங்கள் ஏற்றப்பட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இதன்போது கோப்பாய்ப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட் டன. நிகழ்வில் மத்திய மாகாணசபையின் செயலர் சுபாஜினி மதியழகன், கோப்பாய் பிரதேசசபை உறுப்பினர் சுகிர்தரூபன், உரும்பிராய் ஒன்றியத்தின் தலைவர் மருத்துவர் கணேச வேல் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-27)

மீசாலை வடக்கு, சுடர் ஒளி முன் பள்ளி சிறார் களின் கலை விழா வும், கௌரவிப்பு நிகழ்வும் மீசாலை மேற்கு பரமேஸ்வரி மணிமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




மரநடுகை மாதம் (நவம்பர்)

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்கவேண்டும்."

– தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதி)–


## மாரிகாலமென்றாலே நோய்க்காலம் தான்...!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டிசெம்பர் மாதத்தின் முதலாவது வாரத்தை டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாகக் கடைப்பிடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாண நகரப் பகுதிகளிலும் டெங்கின் தாக்கம் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் நிலையில், டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான அறிவித்தலை விடுத்திருக்கின்றது யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மட்டுமல்ல, வடக்கின் அநேக மாவட்ட மருத்துவமனைகள், பிரதேச மருத்துவமனைகள் என்பவற்றில் இருந்து கிடைக்கப் பெறும் டெங்குத் தொற்றுத் தொடர்பான தரவுகள் ஆரோக்கியமானவை அல்ல. அத்துடன், ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் 'காய்ச்சல் வரிசைகள்' நீண்டு செல்கின்றன. அதில் கணிசமானவர்கள் சிக்கன் குனியாவால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். வீட்டுக்கு வீடு வாசற்படி என்பதைப்போல் பெரும்பாலான வீடுகளில் இதுவே நிலைமை. ஆக, இந்த மாரிகாலம் வழக்க மான மழைக்காலங்களை விடவும் ஆபத்தானது என்ற செய்தியைத்தான் அந்தத் தரவுகள் கட்டியம் செய்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நிலவும் மக்கள் நெருக்கம், சுகாதாரமற்ற பொதுச்சூழல், மாறிப்போன உணவு முறைகள், அனைவரின் உடலிலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துவரும் நிலை, இடைநடுவில் கைவிடப்பட்ட கட்டுமானங்கள், முறையான வகையில் பராமரிக்கப்படாத வாய்க்கால்களில் தேங்கிநிற்கும் தண்ணீர் போன்றவற்றால் மழைக்காலம் என்றாலே 'நோய்க்காலம்' என்பது எழுதப்படாத விதியாகிவிட்டது. மாரி வந்ததும் அச்சமும் பதற்றமும் சூழும் அளவுக்கு எங்களின் வாழ்க்கை மாறிப்போய் விட்டது. ஒவ்வொரு பருவகாலத்தின்போதும், ஏராளம் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் எந்தப் பயனும் இல்லை. வரவேண்டிய மாற்றங்கள் சாத்தியப்பட்டதாயில்லை. கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் டெங்கு பரவும் ஏதுநிலைகளாக இருந்த பகுதிகள் - ஆபத்தான இடங்கள் அப்படியே தொடர்கின்றன. ஆனால், அபிவிருத்தி என்ற பெயரில் என்னென்னமோ எல்லாம் செய்கின்றார்கள். எது அபிவிருத்தி? எது முதலீடு? நோயற்ற வாழ்க்கை தான் ஆகப்பெரும் அபிவிருத்தி. சுகாதாரத் துறை மீதான செலவீடுகள்தான் வளமான முதலீடுகள்.

அதிகாரக் கதிரைகள் முறையாகவும் - வினைத்திறனாகவும் செயற்படாத பட்சத்தில் மக்கள் தமது சுயபாதுகாப்புத் தொடர்பில் அதீத ஈடுபாட்டுடன் செயற்படவேண்டும். ஆதலால் குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டிராதவர்கள் பொதுவெளிகளில் அதிகம் நடமாடுவதைத் தவிர்ப்பதோடு, டெங்கு பரவும் ஏதுநிலைகளையும் இல்லாதாக்கவேண்டும். பலவித நோய்களுடன் பலநூறு நோயாளர்கள் மருத்துவமனை வளாகத்துக்குள் தினம்தினம் சென்று திரும்புகின்றனர். பல்வேறு சூழலியல்களுடன் அவர்கள் தொடர்புறுகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் மருத்துவமனையின் வளாகத்துக்குள் சிறுவர்கள், குழந்தைகளை தேவையற்ற விதமாக அழைத்துச் செல்வதை முற்றாகத் தவிர்த்தல் நல்லது. எமது பாதுகாப்புக்கு மட்டுமல்ல, எமது சமூகம்சார் பாதுகாப்புக்கும் நாமே பொறுப்பாளிகள்.

எல்லாவற்றுக்கும் மேல், டெங்குக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை பாதி மழைக்காலம் தாண்டிய பின்னர்தான் ஆரம்பிக்கவேண்டுமென்றல்ல. மழைக்காலம் ஆரம்பிக்க முன்னர் அதற்கு ஏதுநிலைகளாக உள்ள பகுதிகளைத் தூய்மைப்படுத்துவது அவசியம். அது இலகுவானது 'சுமையற்றது' நேரத்தையும் பணத்தையும் மீதப்படுத்த வல்லது. எனினும் எமது அதிகாரிகள், சுண்டங்காயைவிட சுமைகூலிக்குச் செலவழிப்பதில் தான் வல்லவர்கள்.



## மின்சாரப் பேருந்துகள் சீனாவால் உதவித்திட்டம்



கொழும்பு, நவ.24

**இலங்கைக்கு மின்சாரப் பேருந்துகளை வழங்குவதற்கான உதவித்திட்டத்தை சீனா பரிசீலித்துவருவதாக இலங்கைக்கான சீனத்தூதுவர் ஷி ஷென் ஹொங் தெரிவித்துள்ளார்.**

எரிபொருள் இறக்குமதிக்காக வெளிநாட்டுச் செலாவணியை நம்பியிருக்கும் இலங்கை கடந்த காலத்தில் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியது. இதனால் பொதுப் போக்குவரத்து மற்றும் மக்களின் தினசரி வாழ்க்கை வெகுவாகப் பாதித்தது.

மின்சாரப் பேருந்துகளுக்கு மாறுவது எரிபொருள் இறக்குமதியைக் குறைப்பதுடன் கொழும்பு போன்ற நகரங்களில் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் உதவும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் போன்ற நிறுவனங்களின் ஆதரவுடன் மின்சார வாகனங்களுக்கான சோதனைத் திட்டங்கள் ஏற்கனவே இலங்கையில் நடந்துவருகின்றன.

சமீபத்திய ஆண்டுகளில், மத்திய அதிவேக நெடுஞ்சாலைப் பணிகள், சினோபெக் எரிசக்தித் திட்டம் போன்ற சீன ஆதரவுடைய வளர்ச்சித் திட்டங்களில் இலங்கை சீரான முன்னேற்றம் கண்டு வருகிறது.

இந்த மின்சாரப் பேருந்துத் திட்டம் இலங்கைக்கு நடைமுறைக்கு வந்தால், அது இலங்கையின் போக்குவரத்துத்துறையில் பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும். எரிபொருள் விலையின் நிலையற்ற தன்மையிலிருந்து இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை இந்தத் திட்டம் விடுவிக்கும் என்று குறிப்பிடப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## பெண்ணொருவர் கொடூரக்கொலை

கொழும்பு,நவ.24

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹூலான்னுகே 12ஆவது போஸ்ட் பகுதியில் பெண் ஒருவர் மண்வெட்டியால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

உயிரிழந்தவர் ஹூலான்னுகே பொத்துவில் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவராவார். சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



## ஓட்டோ-பஸ் விபத்து ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு,நவ.24

ஹங்குரன்கெத்த பிரதேசதில் முச்சக்கரவண்டி ஒன்றும், பேருந்து ஒன்றும் நேற்றுமுன்தினம் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

ஹங்குரன்கெத்த, ஹூலங்வங்குவ என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. முச்சக்கரவண்டியில் பயணித்த 45 வயதான பெண்ணே விபத்தில் உயிரிழந்துள்ளார். (ச-இ)




## 827 மில்லியன் டொலர் 9 மாதங்களில் முதலீடு

கொழும்பு.நவ.24

நிதி அமைச்சின்கீழ் முக்கியமான வருமானம் ஈட்டும் நிறுவனங்களில் 2025 செப்ரெம்பர் மாதம் வரையில் 827 மில்லியன் அமெரிக்க டொலர் நேரடி வெளிநாட்டு முதலீடுகளாகப் பெறப்பட்டுள்ளது. அரசாங்க நிதி பற்றிய குழுவில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

## 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு.நவ.24

தற்போது நிலவும் அதிக மழையின் காரணமாக நாட்டில் 10 மாவட்டங்களுக்குத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, அம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை – கார்த்திகை 9

25.11.2025

சுபநேரம் : 10.42 - 12.12

ராகுகாலம் : 03.12 - 04.42




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும்.

**கன்னி:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும்.

**துலாம்:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார்.

# சுத்தமான குடிதண்ணீர் இன்றி ஆபத்தில் கிளிநொச்சி மக்கள்

கிளிநொச்சி,நவ.24

சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை விநியோகிக்கும் கிளிநொச்சிக் குளத்துக்குள் பெருமளவு கழிவுகள் வந்தடைவதால் சுத்தமான குடிதண்ணீர் பெறுவதில் கிளிநொச்சி மக்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். மாவட்ட மக்களை நோயாளிகளாக மாற்றாமல் உரிய துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று சமத்துவக்கட்சியின் பொதுச்செயலாளர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை கிளிநொச்சிக் குளத்திலிருந்து நீரைப் பெற்று சுத்திகரித்து வழங்கி வருகின்றது. ஆனால் இந்தக் குளத்துக்குள் நகரின் அனைத்துக் கழிவுகளும் வந்துசேர்கின்றன.

ஆறு வழியாக இரத்தினபுரம் பாலம் ஊடாக கிளிநொச்சி மருத்துவமனைக் கழிவுகள் உட்பட மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கின்ற பல கழிவுகள் குளத்தை வந்தடைகின்றன.

அத்துடன் குளம் மற்றும் அதன் நீரேந்து பகுதிகளை ஆக்கிரமித்துக் குடியேறியுள்ளவர்களின் மலக்கழிவுகளும் குளத்தை வந்தடைகின்றன. இந்தக் குளத்திலிருந்தே நீர் சுத்திகரிக்கப்பட்டு குடிதண்ணீராக விநியோகிப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நிலத்தடி நீர் மாசுப்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளில் அதிகளவு இரசாயனங்களின் பயன்பாட்டாலும் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அதே வேளை இரணைமடுக் குளத்தை மாவட்டத்தில் உள்ள ஒரு சிறு குழுவினர் ஏகபோக உரிமை கோர அனுமதிக்கமுடியாது. அவர்களின் நலன்களுக்காக மாவட்ட மக்களின் நலன்களைப் பகடையாக்க முடியாது.

எனவே சட்டரீதியற்ற ஒரு அமைப்பின் கருத்துகளுக்காக கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு பாதுகாப்பற்ற குடிதண்ணீரை விநியோகிக்க அனுமதிக்க முடியாது. எனவே இதற்கு விரைவில் உரிய தீர்வு காணப்படவில்லை எனின் பாதிக்கப்பட்ட மக்களுடன் வீதியில் இறங்கவேண்டி ஏற்படும். - என்றார். (சு-55)




## கார்த்திகை வாசம் நிகழ்வில் இசைப்பாடல் வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.24

வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு, நல்லூர் கிட்டுப் பூங்காவில், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஏற்பாடு செய்துள்ள கார்த்திகை வாசம் மலர்க்கண்காட்சியில் கார்த்திகை மலரே என்ற இசைப்பாடல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இசைப்பாடலை வெளியீடு செய்ய, சிரேஷ்ட இசையமைப்பாளர் க. சத்தியன் பெற்றுக்கொண்டார்.

தமிழகத்தின் பாடலாசிரியர் யுகபாரதி எழுதிய பாடலை ஈழத்தின் பாடகி ஜெயபாரதி பாடியுள்ளார்.

பூவன் மதீசனின் இசையில் உருவான இந்தப் பாடலின் ஒலிப்பதிவை மதிமனு மேற்கொண்டுள்ளார். (சு-27,66)

# தமிழரசுக் கட்சியினரால் மாவீரர் நினைவேந்தல்




மன்னார்.நவ.24

மாவீரர் நினைவேந்தல் வாரத்தை யொட்டி இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார்க் கிளை ஏற்பாடு செய்த மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் புகையிரத வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார்க் கிளை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார்க் கிளைத் தலைவர் ப.குமார் தலைமையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மாவீரர்கள் நினைவாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-56)

## கிளிநொச்சி பஸ் நிலையத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு



கிளிநொச்சி,நவ.24

கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முகமட் சுல்தான் நஜீம் கலந்துகொண்டு போதைப்பொருள் கட்டுப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக தெளிவூட்டினார். அத்துடன் போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. இதில் வர்த்தகர்கள், முச்சக்கரவண்டிச் சாரதிகள், பேருந்து நிலையப் பயணிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்.

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார், ஆகிய பகுதிகளில்.

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

(CS 30747) A

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம்

நல்லூர் சங்கிலியன் மன்றத்தினரால் 2026ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறி கற்கைநெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மனைப் பொருளியல் டிப்ளோமா, என்.வி.கியூ Level (4) கற்கைநெறியுடன் இணைந்த ஆடை வடிவமைத்தல் பயிற்சிநெறி என்பவற்றுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. இக்கற்கைநெறிகள் 01.01.2026 இல் ஆரம்பமாகவுள்ளன.

பாடசாலை கல்வியை நிறைவுசெய்த பெண் பிள்ளைகள் 20.12.2025 இற்கு முன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02.10.1963 | 24.11.2024 |



### சிவபாலரெட்ணம் அமுதா

ஓர் ஆண்டு கடந்தாலும், உங்கள் நினைவு குறையவில்லை.
நீங்கள் காட்டிய பாசம் இன்னும் நெஞ்சில் நிலைக்கின்றது.
தினமும் உங்கள் முகம் மனக்கண்ணில் தோன்றுகிறது.
சொல்லிக்கொண்ட வார்த்தைகள் வழிகாட்டுதலாய் நிற்கின்றன.
இல்லாத வெற்றிடத்தை காலமும் நிரப்ப முடியவில்லை.
எவ்வளவு தூரம் சென்றாலும், நினைவு நம்மைத் தழுவுகிறது.
வாழ்க்கை தொடர்ந்தாலும், உங்களின் தடம் அழியாதது.
உங்கள் அன்பு இன்று நம்மை உறுதியாக நிறுத்துகிறது.
மறைந்தாலும் மறைவில்லாதீர்...
நம் இதயங்களில் என்றும் நிலைத்திருப்பீர்.

10, பாரதி வீதி,
கச்சேரி நல்லூர் றோட்
யாழ்ப்பாணம்

கணவர்:
சிவராஜா சிவபாலரெட்ணம்
077 024 9384

(CS 59962) E

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.10.1993 | 29.11.2019 |



### மகேந்திரன் கோபினா

திதி: சதுர்த்தி (24.11.2025)

**வாழ்வில் வந்த பெரும் வரமே**
பட்டாடை உனக்குண்டோ, பலவிதமாய் உணவுண்டோ?
கட்டாகப் புது நூல்கள் வாசிக்க நிறைய உண்டோ?
கிட்டே எம் சிந்தனையே சிறகடிக்கும் வாழ்வியலே
எட்டாத உயரத்தில் உனை இருத்தி ஏங்குகிறோம்
வீட்டோடு நாம் இருந்து உன் நினைவில் வாடுகிறோம்
கூட்டை விட்டுப் பறந்து சென்ற மாயமென்ன பைங்கிளியே!
தொட்டணைக்க முடியாத தொலைவில் நீ இருந்தாலும்
பெட்டகமாய் எமைக் காக்கும் பெரும் தெய்வம் நீயம்மா
வட்டமெனச் சுழல்கின்ற காலத்தின் சக்கரத்தில்
கட்டாயம் சந்திப்போம் காத்திரம்மா அதுவரைக்கும்

92, குமரபுரம்
பரந்தன்

துயர் பகிரும்
அன்பு அப்பா, ஆசை அம்மா
மற்றும் உறவினர்கள்.

(CS 30418) E



## தொழில் முயல்வோருக்கு மேம்படுத்தல் பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.24

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் ஆசியா பவுண்டேசன் நிதி அனுசரணையில் வட மாகாண பிரதேச அபிவிருத்தி வங்கியினால்தொழில்முயற்சியாளர்களுக்கான வியாபார மேம்படுத்தல் தொடர்பான பயிற்சிநெறி நிகழ்வு மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வி.தர்சினி தலைமையில் அண்மையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பயிற்சிநெறியில் கலந்துகொண்ட 120 தொழில் முயற்சியா ளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச)

# மரண அறிவித்தல்



## மோகன் கீர்த்திகன்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01.06.2001 | 15.11.2025 |

டென்மார்க்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கீர்த்திகன் மோகன் அவர்கள் 15.11.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் துரைச்சாமி (போமன்), காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர், உடுவில்), காலஞ்சென்ற தம்பிஜயா - தனலட்சுமி (திருநெல்வேலி) தம்பதிகளின் அன்புப் பேரனும், மோகன் - கௌரி தம்பதிகளின் அன்பு மகனும், சத்தியதேவி - ராஜகோபாலன் (லண்டன்), சுலோஜனா (ஆனந்தி) - அருந்தவராசா (உடுவில்), துஷ்யந்தி (ஜெயந்தி) - ஸ்ரீரங்கநாதன் (பேர்லின்), பகீரதன் (லண்டன்), சயந்திரதன் - ஹேமமாலினி (சுவீடன்) தம்பதிகளின் மருமகனும், சுகிர்தா - பாஸ்கரன் (லண்டன்), அமிர்தா - காலஞ்சென்ற தியாகலிங்கம் (திருநெல்வேலி) தம்பதிகளின் பெறாமகனும், வாசுகி, யதுஷன், தானிகா ஆகியோரின் மைத்துனரும், அபிராம், கௌதம், ஆர்த்தி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், ஜெனார்த்தனின் சகலனும், காலஞ்சென்ற செல்வராசா - கனகம்மா (திருநெல்வேலி) தம்பதிகளின் பேரனும், காலஞ்சென்ற சபாபதி, கந்தசாமி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் தந்தைவழிப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 25.11.2025 செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாடசாலை மேற்கு வீதி,
காளி கோவிலடி
உடுவில்

தகவல்: குடும்பத்தினர்
0045 6022 0463 (தந்தை)
077 667 9682 (அத்தை)

(CS 59988) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை
# வழங்குனர்களைப் பதிவு செய்தல் - 2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்கள், உபகரணங்களை விநியோகிப்பதற்கும், சேவைகளை வழங்குவதற்கும் ஆர்வமுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், உள்ளூர் முகவர்கள், வழங்குநர்களிடமிருந்து 2026 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான படிவங்கள், நிபந்தனைகள் உள்ளடங்கிய ஆவணங்களை நேரடியாக மாநகரசபையின் பெறுகை முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

| குறி. இல | பொருட்கள் / உபகரணங்கள் | குறி. இல | சேவைகள் |
|---|---|---|---|
| G1 | காகிதாதிகள், எழுதுபொருட்கள் | S1 | விளம்பரப் பலகைகள் அமைத்தல் |
| G2 | அலுவலக தளபாடங்கள் (இரும்புருக்கு, மரம், பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ்) | S2 | அனைத்து அச்சிடுதல், புத்தகம் கட்டுதல் நடவடிக்கைகள் |
| G3 | ஆயுர்வேத / சுதேச மருந்து வகைகள், மருந்துச் சரக்குகள், மருத்துவ உபகரணங்கள் | S3 | ஏற்றியிறக்கும் வேலைகளுக்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல் |
| G4 | சித்த மருத்துவ மருந்துகள் | S4 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| G5 | சமைத்த உணவு, குளிர்பானம், சிற்றுண்டி, பேக்கரி உணவுப் பொருட்கள் | S5 | ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல் |
| G6 | மென்பானங்கள், பால், பால்மா வகைகள், தேயிலை, சீனி, வேறு உணவுப் பொருட்கள் சம்பந்தமானவை | S6 | சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்துதல் |
| G7 | கோலவுடைத் துணிகள், யன்னல் திரைச்சீலைத் துணிகள், நிலவிரிப்புப்படுக்கை, மேசை விரிப்புக்கள், தலையணை உறைகள், மெத்தைகள், மழை அங்கிகள், கால் மிதிகள் | S7 | கணனிகள், பிறின்ரர்கள், ஸ்கானர்கள், தொலைநகல், கைவிரல் அடையாள இயந்திரங்கள் பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல் |
| G8 | பாதணிகள், தோற்பொருட்கள் | S8 | மின் கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல் |
| G9 | கட்டிட வேலைக்கான மூலப்பொருட்கள் (சீமெந்து, ஓடு, கூரைத்தகடு, சீலிங், கம்பி வகைகள் முதலியன) | S9 | மின் உபகரணங்கள், மின் இணைப்புப் பொருட்கள் பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல் |
| G10 | தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன | S10 | இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல் |
| G11 | செரமிக் பொருட்கள் | S11 | வளிச்சீராக்கி திருத்தம், பராமரிப்பு சேவைகள் |
| G12 | கற்கள், சல்லிகள், கிறவல், கருங்கல் துகள்கள், மணல், ABC கலவை | S12 | **வாகனங்கள் பழுதுபார்த்தல் - உள்வாரியான திருத்தம்** இயந்திரம் மற்றும் வாகனப் பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள் |
| G13 | நீர்வழங்கு பொருட்கள், PVC குழாய்கள், நீர்த்தாங்கி, நீர்ப்பம்பிகள் | S13 | **வாகனங்கள் பழுதுபார்த்தல் - வெளிவாரியான திருத்தம்** தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும், பெயின்ட் அடித்தலும் |
| G14 | வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள் | S14 | வாகனம் பராமரித்தல் மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் (Maintenance & Service) |
| G15 | வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன | S15 | வாகனங்களுக்கான wiring / Electrical works |
| G16 | எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ் | S16 | வாகனங்களுக்கான A/C திருத்தம் |
| G17 | இரும்புப்பொருட்கள் | S17 | வாகனங்களுக்கான குசன் வேலைகள், தள விரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளக வேலைகள் |
| G18 | பொருத்துகைப் பொருட்களும், கண்ணாடி வகைகளும் | S18 | போட்டோ பிரதி இயந்திரங்கள் பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல் |
| G19 | விறகு, தேங்காய் மட்டை, கிடுகு, சாக்கு | S19 | CCTV கமரா, அதனுடன் தொடர்புடைய பொருட்கள் திருத்தம், பராமரிப்பு சேவைகள் |
| G20 | தீராந்திகள், றீப்பைகள், பலகைகள், பனை மரங்கள், சலாகைகள் | S20 | கணனி மென்பொருள் வடிவமைப்பு மற்றும் மென்பொருள் மேம்படுத்தல் |
| G21 | தீயணைப்புச் சேவைகளுக்குத் தேவையான பொருட்கள் / உபகரணங்கள் | S21 | கனரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்துதல் |
| G22 | மின்சார இணைப்புப் பொருட்கள், மின்சார உபகரணங்கள், குளிரூட்டிகள், வீதிவிளக்குகள் | S22 | தனியார் சுத்திகரிப்பு, திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் பிரித்தெடுப்பு சேவை வழங்கல் |
| G23 | மேசன் வேலைக்குத் தேவையான உபகரணங்கள் | S23 | தனியார் பாதுகாப்பு சேவை வழங்குதல் |
| G24 | தச்சு வேலைக்குத் தேவையான உபகரணங்கள் | S24 | திரவக்கழிவு பரிகரிப்பு தொகுதியை முகாமை செய்தல் |
| G25 | வேலைத்தள உபகரணங்கள் (மண்வெட்டி, கோடாரி, கத்தி, சவள்) | S25 | சேதனப்பசளை உருவாக்கல், பொதியிடல், சந்தைப்படுத்தல் |
| G26 | வெல்டிங், ரிங்கரிங் தொடர்பான பொருட்கள் | S26 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| G27 | விளையாட்டு உபகரணங்கள், பொருட்கள் | S27 | வாடகைக்கு வாகனங்களை வழங்குதல் |
| G28 | நூலகங்களுக்குரிய நூல்கள், சஞ்சிகைகள், பருவ வெளியீடுகள் | S28 | கோலவுடைகள், திரைச்சீலைகளை தைத்து வழங்குதல் |
| G29 | தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கயிறு வகைகள் | S29 | குழாய்க்கிணறு அமைத்தல் |
| G30 | சுத்திகரிப்புப் பொருட்களும், கிருமிநாசினிகளும் | S30 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| G31 | கணனி, போட்டோ பிரதி இயந்திரம், தொலைநகல் மற்றும் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மற்றும் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், ரோணர்கள், றிபன்கள் வழங்கல் | S31 | வீதி வேலை, கட்டட நிர்மாணம், பூங்கா/ மைதானம் பராமரிப்பு, கனரக வாகனங்கள் கையாளல் ஆகியவற்றிற்கு பயிற்றப்பட்ட தொழிலாளர்களை வழங்குதல் |
| G32 | குடிநீர் சுத்திகரிப்புக்குத் தேவையான குளோரின் | S32 | உள்ளக தொலைபேசி (Intercom) திருத்தமும், பராமரிப்புச் செய்தலும் |
| G33 | CCTV கமரா, Web கமரா மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள் | S33 | தீயணைப்புக் கருவிகள் திருத்தமும், பராமரிப்புச் செய்தலும் |
| G34 | வெற்று பரல்கள் | S34 | ஒளி மற்றும் ஒலிப்பதிவு சேவைகள் வழங்குதல் |
| G35 | தார் | S35 | மீள்சுழற்சிக்கு உள்ளாக்கக்கூடிய திண்மக் கழிவுகளை மீள்சுழற்சியாளர்களிடம் எடுத்துச்சென்று சந்தைப்படுத்தல் |
| | | S36 | நாளாந்த அடிப்படையில் பயிற்றப்படாத பணியாளர் சேவை வழங்குதல் |
| | | S37 | தங்குமிட சேவைகளை வழங்குதல் |

**வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2026 இற்கான படிவங்களை 24.11.2025 ஆம் திகதி முதல் 23.12.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ் மாநகரசபையின் கொள்வனவுப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணமாக ரூபா 1000/- மற்றும் வரிகள் (VAT 18%) உள்ளடக்கியதாக காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையினை "ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்" என்ற பெயருக்கு பெறப்பட்டு**

- **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்**
- **வியாபாரப் பதிவுச் சான்றிதழின் / நிறுவனப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி**
- மாநகர சபை / நகர சபை / பிரதேச சபை வரிப்பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- பெறுமதி சேர் வரிச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (ஏற்புடையதாயின்)

ஆகியவற்றையும் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் "முன்னரங்கு அலுவலகத்தில்" நேரடியாக கடமை நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும்போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள், சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள், சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவு புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் அவற்றுக்கான கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2026" எனக் குறிப்பிட்டு நேரடியாக / "ஆணையாளர், யாழ்ப்பாண மாநகரசபை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். **23.12.2025 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.**

**24.11.2025**

**முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் இப்போது யாழ்ப்பாணத்தில்

உங்கள் நம்பகமான பொறியியல் கூட்டாளர் எப்போதும் இல்லாத அளவுக்கு என்றும் உங்களுடன் அருகில் இருக்கிறார்கள்

Cummins
மின் உற்பத்திகள் & சந்தைப்படுத்தலுக்கு பின்னரான சேவைகள், ஆதரவுகள்

Schindler
Elevators & Escalators

Fleetguard
வடிகட்டுதல் & போலியில்லாத இயந்திரப் பாதுகாப்பு

LOVOL
கனரக இயந்திரங்கள்

## யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ள சேவைகள்

**CUMMINS பிரச்சனைகளுக்கான தீர்வுகள்**

- டீசல் ஜெனரேட்டர்கள் (15–3350 kVA)
- கடல்சார் இயந்திரங்கள் மற்றும் ஜெனரேட்டர் செட்
- உத்தரவாத பழுதுபார்ப்புகள் & AMCs
- நம்பகமான உதிரி பாகங்கள்

**Fleetguard வடிகட்டுதல்**

- அதிக வலிமை கொண்ட வடிகட்டிகள்
- மின் உற்பத்தி பிரிவு, போக்குவரத்து & கட்டுமானத்திற்கானவை
- போலிகள் அற்ற Cummins - அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு

**SCHINDLER பிரச்சனைகளுக்கான தீர்வுகள்**

- Elevators & escalators
- Installation support
- Preventive maintenance

**LOVOL கனரக இயந்திரங்கள்**

- Forklifts
- Backhoe Loader
- Excavators
- Wheel loaders
- உத்தரவாதம் மற்றும் சேவைகள்

tpl EXPERIENCE CENTRE

இல. 15, டச்சு வீதி, இருபாலை சந்தி, கோப்பாய், யாழ்ப்பாணம்

076 197 7151 | 021 781 9200

www.tpl.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
21 . 04 . 1964



இறைவன் அடியில்
23 . 11 . 2025

### திருமதி துஷ்யந்தி மிகுந்தன்

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பொறியியல் பேராசிரியை)

உசன், மிருசுவிலை பிறப்பிடமாகவும் 49/4, மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பொறியியல் பேராசிரியை திருமதி துஷ்யந்தி மிகுந்தன் அவர்கள் நேற்று 23.11.2025 இறைவனடி எய்தினார்.

அன்னார் அமரர்களான பேரம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், அரவிந்தன், ரகுவிந்தன், வினோவிந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பேராசிரியர் கு.மிகுந்தன் (விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களது பாசமிகு மனைவியும், வைத்தியர் மிதுறிகா (Registrar, NCTH), பொறியியலாளர் துமிலன் (மென்பொறியியலாளர் - WSO2), வைத்தியர் வக்ஷலன் (யாழ். வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வைத்தியர் திவாகரன் (SR Nephrology, கொழும்பு தேசிய வைத்தியசாலை), மாதங்கி (விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்), வைத்தியர் ஜோகினி (சிறீவர்த்தனபுர வைத்தியசாலை) ஆகியோரின் மாமியாருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24.11.2025) திங்கட்கிழமை அமரரின் இல்லத்தில் மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அஞ்சலிக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பிற்பகல் 1.30 க்கு வைக்கப்பட்டு பின்னர் 3.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் அடக்கஞ் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**49/4, மணல்தறை லேன்,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**071 8475 539**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 0001) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 04 . 1979



மறைவு
21 . 11 . 2025

### சுந்தரம் விக்கினேஸ்வரன் (விக்கி)

கைதடி மத்தி குமரநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் விக்கினேஸ்வரன் 21.11.2025 காலை 09.00 மணியளவில் காலமானார்.

அன்னார் சுந்தரம் காலஞ்சென்ற சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரிக்காவின் அன்புக் கணவரும், சதுணன், திஷானன், சதுஸ்ரிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாகரன், பிரபாயினி, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆனந்தராசா, மல்லிகாதேவி, கௌதமி, பரமேஸ்வரி, மனோரஞ்சிதம், ஞானகௌரி, பாலகிருஷ்ணன், ஞானசுந்தரி, திலீபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கைதடி மத்தி,**
**குமரநகர், கைதடி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CR 46565) A

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 04 . 1946



மறைவு
23 . 11 . 2025

### யோகரட்ணம் நித்தியலக்சுமி

கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோகரட்ணம் நித்தியலக்சுமி அவர்கள் நேற்று (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், யோகரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், நிமலரட்ணா (பிரான்ஸ்), சமித்திரா, சாவித்திரி, நிமலினி (பிரான்ஸ்), குமுதினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகலா, ஜயாத்துரை, பத்மநாதன், திருலோகசிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இரத்தினதேவி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், பரமேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் ரேவதி அம்மா, காலஞ்சென்ற நடராசா, இராஜேஸ்வரி, மீனாட்சி ஆகியோரின் மைத்துனியும், மயூரன் + தனுஷா, கிருஷ்ணிகா + நிஷாந்த், ஷஜனிகா + சஜீபன், ஜனர்னிகா, ஹரிணி (பிரான்ஸ்), ஜனனி (பிரான்ஸ்), சாலினி (பிரான்ஸ்), தர்சிகா + கனோஜி, கோபிகா + கோபிநாத், சத்தியப்பிரியா + கஜலக்சன், நிவேதிகா, பிரியங்கா + விக்டர் (பிரான்ஸ்), மதுஷா + டிருக்சன் (ஜேர்மன்), அமரர் ஆகாஷ், அஸ்வின் (பிரான்ஸ்), வினித் (ஜேர்மன்), அபிராம் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அஜிர்சன், அனன்யா, ஹபிஷ்னா, ஹர்சனா, ஆத்விக், சகாரிகா, கிஷாலினி, வர்சித், விக்ரம், எட்சியன் (பிரான்ஸ்), எலயோனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2025) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்பு:**
**மயூரன் (பேரன்) 077 122 5965**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 04 . 1958



மறைவு
22 . 11 . 2025

### திருமதி சிவசந்திரன் தவமணி

பளை நகரம் பளையினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசந்திரன் தவமணி அவர்கள் கடந்த 22.11.2025 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்புகுட்டி தையலம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிவசந்திரனின் மனைவியும், அகீபன் (தம்புகுட்டி பல்பொருள் வாணிபம்-பளை), சாமந்தி (Panasia Bank - Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மராசா (சாவகச்சேரி), தம்பித்துரை (அமெரிக்கா), திலகவதி (கனடா), தனபாலசிங்கம் (கனடா), தவராசா (கனடா), ரேவதி (ஆசிரியர், கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பவானி, லீலா, பூமணி, அர்ச்சினி, சிவசுந்தரராசா, முரளிதரன் (விவசாய திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனியும், சசிக்கா, சியான், கயானி, குகறாம் (பேராதனை பல்கலைக்கழக பொறியியல்பீட 3ம் வருட மாணவன்), கேசிகன் (கிளி/பளை மத்திய கல்லூரி, உயர்தர மாணவன்) ஆகியோரின் பெரியம்மாவும், தனுசா, தேனுகா, சோபனா, பபினேஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மலையான் காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**T.P: 077 3617 519**
**076 4800 976**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CR 46566) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபைக்குப்....

மாகாணசபைத் தேர்தல் ஒரு வருடத்துக்குள் நடத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தாலும், இன்னமும் தேர்தல் நடத்தப்படவில்லை. கடந்தவாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடத்திய ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக எந்த வாக்குறுதியையும் வழங்கவில்லை. இந்தநிலையில், மாகாண சபை முறைமையைப் பதிலீடு செய்யும் பிறிதொரு முறைமை தொடர்பாக அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இனிவரும் காலங்களில் மாகாண சபைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாகப் பேசுவதில் அர்த்தமில்லை என்றும், அதைப் பதிலீடு செய்யக்கூடிய மாற்றுவழிகள் தொடர்பாக சிந்திப்பது அவசியம் என்றும் அரசாங்கத்தின் நெருக்கமான கொழும்பு வட்டாரங்களில் இருந்து கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தபடி எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் புதிய அரசமைப்புஉருவாக்கப்பணிகளில்மாகாண சபை முறைமையை பதலீடு செய்யும் முறைமை தொடர்பாக ஆராயப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## விவசாயப்....

மிகுந்தன் காலமானார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

தென்மராட்சி, உசனைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி துஷ்யந்தி மிகுந்தன் கலாநிதிப் பட்டம் பெற்று, வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்று சிறப்புப் பயிற்சிகளை நிறைவு செய்து நீண்டகாலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியிருந்தார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடப் பேராசிரியர் மிகுந்தனின் வாழ்க்கைத் துணைவியாராவார். (எ-66)

## வெளியானதா...

டுள்ளது. பொருளியல் வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே வெளியாகியது என்று சமூக வலைத்தளங்களில் பல்வேறு தகவல்கள் கடந்த நாள்களில் பரவியிருந்தன. இது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்ட விசாரணையில், வினாத்தாள் வெளியானமைக்கான எந்வொரு உறுதியான தகவலும் கிடைக்கவில்லை என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயினும் இது தொடர்பாக முறையான மற்றும் விரிவான விசாரணையை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## விசமத்தனமான...

நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனான சந்திப்பில் நான் முதலாவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோட்பாட்டைச் சுட்டிக்காட்டினேன். ஒரு பிரிக்கப்படாதநாட்டுக்குள்மீளப்பெறமுடியாத அதிகாரப் பகிர்வு. அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்ற தமிழரசுக் கட்சியின் கோட்பாட்டை ஜனாதிபதிக்குத் தெரிவித்தேன்.

நாம் எந்த இடத்திலும் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்கின்றோம் என்று குறிப்பிடப்படவில்லை, சமஷ்டியைக் கைவிட்டுவிட்டோம் என்று கூறப்படவில்லை. இதன் அடிப்படையிலேயே இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றன. நாங்கள் சமஷ்டியை வலியுறுத்தினோம். அவ்வாறிருக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரனும் நாம் தமிழ் இனத்துக்கு துரோகமிழைத்துவிட்டோம் என்று கூறுவது விசமத்தனமானது.

நாம் சென்றால் அரசமைப்புத் தொடர்பாக மட்டும்தான் பேசவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகின்றார். எமது கட்சிக்கென சில கொள்கைகள், கோட்பாடுகள், பொறுப்புக்கள் உள்ளன.

கஜேந்திரகுமார் கூறுவது போன்று அரசமைப்புத் தொடர்பாக மட்டும் பேசிக்கொண்டிருந்தால் ஏனைய அனைத்தும் கைவிட்டுப்போகும். அரசமைப்புத் தொடர்பாகப் பேசும் போது ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் நாம் பேச வேண்டும். மாகாண சபைத் தேர்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல்கைதிகள் விடயம் போன்ற பல விடயங்களை நாங்கள் பேசினோம். அது எமது கட்சியின் கொள்கை, அதை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது-என்றார். (எ-26)

## உள்ளக...

உள்ளக விளையாட்டரங்குக்கான அடிக்கல்லை அமைச்சர்கள், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து நட்டனர். சிவில் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தெற்காசிய ரீதியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய விளையாட்டு வீரர்கள் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ-26)

## குற்றக்குழு...

யுள்ளன.

இந்தச் சட்டவரைவு பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாக அமையாது என்றும், இந்தப் புதிய சட்டவரைவை அடுத்தமாதம் சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நீண்டகாலமாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரத்தை வழங்கும்வகையில் இந்தப் புதிய சட்டவரைவு அமையவுள்ளது.

இந்தச் சந்தேகநபர்களை நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்குரிய ஏற்பாடுகளுடன் புதிய சட்டவரைவு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 17வயது...

தடுத்துவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த 17 வயது மாணவனிடம் ஆயிரத்து 500 போதை மாத்திரைகளும், யாழ்ப்பாணம் ஊரெழுவைச் சேர்ந்த மாணவனிடம் 200 போதைமாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-26)

## சிசு...

புலோலி மடமேற்கைச் சேர்ந்த தம்பதியருக்குக் கடந்த சனிக்கிழமை பிறந்த சிசுவே உயிரிழந்தது. இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் நேற்று மேற்கொண்டார்.

சிசுவின் சடலத்தை யாழ்ப்பாணம் போதனார மருததுவமனையில் ஒப்படைத்து உடற்கூற்றுறப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டார். (எ-100)

## மழை...

களில்100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி கிடைக்கலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக அதிகரித்து வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்கப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## நீச்சல்...

டப்பட்டது. தற்போதைய அரசாங்கம் அந்த நீச்சல் தடாகத்தைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

நேற்று கல்லூரிக்குச் சென்ற விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, நீச்சல் தடாகத்தைப் பார்வையிட்டார். டைவிங் நீச்சல் தடாகத்தை குறிப்பிட்டளவினரே பயன்படுத்துவார்கள், அந்த நீச்சல் தடாகத்தை ஆழம் குறைந்த சாதாரணமான நீச்சல் தடாகமாக மாற்றினால் அதிகளவானோர் பயன்படுத்த முடியும் என்றும் குறிப்பிட்ட அமைச்சர், பொதுநிதியில் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதிகளவானோருக்குப் பயனளிக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார்.

ஆயினும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மட்டத்தில் இந்த யோசனையை ஒருசாரார் ஆதரவு தெரிவித்தபோதும் இன்னொரு தரப்பினர் அதை எதிர்த்தனர். இந்தக் குழப்பம் காரணமாக முடிவெதுவும் எடுக்கமுடியாத சூழ்நிலை காணப்பட்டது.

அதையடுத்து விளையாட்டுத்துறை அமைச்சர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றியபோதும், சீரமைப்புக்கான நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்யாது அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். பாடசாலை அதிபர் உட்படச் சிலர் நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்யக்கோரியபோது அதை மறுத்த அமைச்சர், இந்த விடயத்தில் பாடசாலை மட்டத்தில் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டிய பின்னர் அதற்கேற்றவாறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளமுடியும் என்று தெரிவித்துள்ளார். (எ-26)




# மாவீரர்களின் பெற்றோர் வள்ளிபுனத்தில் கௌரவிப்பு

முல்லைத்தீவு,நவ.24

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் மாவீரர் தினத்தினை முன்னிட்டு மாவீரர் பெற்றோர், உறவினர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது. சமூகச் செயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன், இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ.சுமந்திரன், புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபையினுடைய தவிசாளர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுதந்திரபுரத்தில் மாவீரர் நினைவு

முல்லைத்தீவு.நவ.24
முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார் கட்டு, சுதந்திரபுரம் பகுதிகளைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் உள்ள யூதா ஆலயத்துக்கு முன்பாக இருந்து மாவீரர் பெற்றோர் மங்கல வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு சுதந்திரபுரம் சந்தியில் உள்ள விளையாட்டுக் கழக மைதானத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட பந்தலில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் மதகுருமார்கள், பிரதேச இளைஞர்கள், பொது மக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். (ச-இ)

# மாகாணங்களின் அதிகாரங்கள் அரசால் திட்டமிட்டுப் புறக்கணிப்பு

## கஜேந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

**கொழும்பு,நவ.24**
**மாகாணங்களுக்கான அதிகாரங்களைத் தொடர்ந்து புறக்கணித்து மத்திய அரசாங்கம் சிறந்தது என்ற நிலைப்பாட்டை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய அரசாங்கம் ஒருதலைப் பட்ச துணை அரசமைப்பு நடவடிக்கைகள் மூலம், மாகாணங்களுக்கு அரசமைப்பு ரீதியாக வழங்கப்பட்ட அதிகாரங்களைத் தொடர்ந்து திரும்பப் பெற்றுள்ளது. சட்டங்கள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், அரச சுற்றறிக்கைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகள், நிர்வாக முறையற்ற செயற்பாடுகள் மூலம் பிரதிநிதித்துவம் பாதிக்கப்பட்டது.

தற்போதைய சுகாதாரத் துறை நெருக்கடி இந்த உத்தியை எடுத்துக்காட்டுகின்றது. ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்பப் பெறுவது அரசியல் திட்டமாகும். மத்திய அரசு நிர்வாகச் சரிவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாகாணங்களுக்கான அதிகாரங்களை முழுமையாக விடுவிப்பதைத் தடுக்கும் போது, மாகாண நிர்வாக முறைமை தொடர்பில் மக்கள் அதிருப்தியடைந்து மத்திய அரசாங்கம் தொடர்பில் அவதானம் செலுத்தும் நிலை ஏற்படும். இது தமிழ் மக்களுக்கு மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தும். பலமருத்துவமனைகள் மாகாண நிர்வாகங்களால் முறையான மாகாணசபையின் ஒப்புதல் இல்லாமல் ஒப்படைக்கப்பட்டன. இது ஜனநாயக நிறுவனங்களையே குறைமதிப்புக்கு உட்படுத்துகின்றது. மாகாண நிர்வாகத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது. குறைந்துவரும் சேவைகளால் விரக்தியடைந்த வடக்கு ஊழியர்களும், பொதுமக்களும் மருத்துவமனை ஒப்படைப்பு மட்டுமே சட்டபூர்வமான வளங்களுக்கான ஒரே வழி என்ற தவறான கதையை நம்பத் தொடங்குகின்றனர். வளங்கள் முறையாக பகிர்ந்தளிக்கப்படாமையால் முரண்பாடுகள் தோற்றம் பெறும். கடந்த காலங்களிலும் அவ்வாறான தன்மையே காணப்பட்டது- என்றார். (க-இ)

# முல்லை மீனவர்கள் கவனவீர்ப்புப் பேரணி

சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு 'உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைபவனி முல்லைத்தீவுக் கடற்கரையில் அண்மையில் இடம்பெற்றது.

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட கரையோர இளைஞர்கள் இணைந்து இந்த நடைபவனியை முன்னெடுத்த னர். சட்டவிரோத மீன்பிடியை இலங்கை அரசாங்கம் முற்றுமுழுதாக தடைசெய்யவேண்டும். மீன்வர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் இதன்போது வலியுறுத்தப்பட்டன. (ச)

# அரசியற்கைதிகளை விடுதலை செய்து இலங்கையர் தினத்துக்கு வலுச்சேருங்கள்

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு,நவ.24
ஆனந்த சுதாகர் உள்ளிட்ட சிறையிலுள்ள 10 தமிழ் அரசியற் கைதிகளையும் அடுத்தமாதம் இடம்பெறவுள்ள இலங்கையர் தினத்துடன் விடுவிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்துங்கள் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவுள்ள இலங்கையர் தினம் தொடர்பில் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் மற்றும் கருத்தறியும் கலந்துரையாடலொன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வாரு தமிழ் அரசியற் கைதிகளுடைய குடும்பங்களும் ஏதோ ஒருவிதத்தில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர். இந்த விடயத்தில் மனிதாபிமானத்துடன் அணுகி, எதிர்வரும் டிசெம்பர்மாதம் இடம்பெறவுள்ள இலங்கையர் தினத்திலாவது தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை உறுதிசெய்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்தவேண்டும்- என்றார். (ச)

# வல்வையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம்,நவ.24
வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் மாவீரர் நாளை முன்னிட்டு நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3 மணி வரை வல்வெட்டித்துறை நகராட்சிமன்றப் பொது மண்டபத்தில் (மரக்கறிச்சந்தை மேல் மாடி) இடம்பெறவுள்ளது.

இந்தக் குருதிக்கொடை முகாமில் பங்கேற்று குருதிக்கொடை வழங்கி உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)




**வீடு வாடகைக்கு உண்டு**
இராசாவின் தோட்டத்தில் மேல்மாடி வீட்டின் மேற்பகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 922 7887
(CS 59990)A



வேலணைப் பிரதேசசபையின் தவிசாளர் க.வசந்தகுமாரன் தலைமையில் புங்குடுதீவில் வெள்ளநீர் வடிந்தோடுவதற்கான துப்புரவுப் பணிகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன. (ச-17)

**வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு**
சித்தங்கேணி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான வீதியில் வட்டுக் கிழக்கு தாவாவளை யில் பிரதான வீதியில் இருந்து 200m உட்புறமாக அமைந்துள்ளது.
6 1/2 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: உமாகணேஸ் - 075 286 7707
Whatsapp - 001 416 881 5244
லலிதா இரத்தின சோதி - 077 372 6685

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org